# விளான் - இளவாலையில் நால்வர் உடல் சிதறிப்பலி; வலிகாமம் முழுவதும் எண்பது பேர் படுகாயம்!


விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 30 இதழ் 122
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12 — 06 — 1992


(யாழ்ப்பாணம்)
வலி-வடக்கில் விளான் சந்தியில் நேற்று பி. ப. 2 மணியளவில் இடம்பெற்ற விமானத் தாக்குதலிலும், இளவாலைப் பகுதியில் இடம்பெற்ற பீரங்கித் தாக்குதலிலும் நால்வர் உடல் சிதறிப் பலியானுர்கள்.
விளான் சந்தியில் இடம் பெற்ற அகோர விமானத் தாக்குதலில் விளானைச் சேர்

[4-ம் பக்கம் பார்க்க]

## முகாம் விஸ்தரிக்கவே படை நடவடிக்கையாம்

(கொழும்பு)
வடபகுதியில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை மேலும் விஸ்தரிக்கும் நோக்கமாகவே தற்போதைய யாழ். குடாநாட்டு தாக்குதல் நடைபெறுவதாக கூட்டுப் படைத் தலைமையகத்தைச் சேர்ந்த கேர்ணல் சரத் முன

[4-ம் பக்கம் . பார்க்க]

## தலைமைப் பணியகம்முன் 5 படையினர் பலி

[கொழும்பு]
பூநகரியில் அமைந்துள்ள இராணுவ தலைமை பணியகம் முன்பாக நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் சிக்கியே 3 படை உயரதிகாரிகள் உட் 5 படையினர் பலியானதாக இராணுவவட்டாரங்கள் தெரி

(4ம் பக்கம் பார்க்க)

# ★ வலிகாமம் பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை; முப்படைகளும் தீவிர தாக்குதல்

## புலிகள் எதிர்த்து சமர்

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் பகுதியில் முப்படைகளும் இணைந்த பாரிய இராணுவ நடவடிக்கை நேற்றுக்காலை ஆரம்பமானது. தெல்லிப்பளையிலிருந்து வடமேற்கு பகுதியை நோக்கிய இந்த படை நடவடிக்கையை விடுதலைப் புலிகள் மிகக்கடுமையாக எதிர்த்து போராடிவருகிருர்கள்.

கனரக கவச வாகனங்கள் சகிதம் விமானப்படை, கடற்படை உதவியுடன் தரைப் படையினர் இத்தாக்குதலை நேற்று அதிகாலை 5 மணியளவில் ஆரம்பித்தனர். கீரிமலை-சேந்தான்குளம் பகுதியை நோக்கி முன்னேறும் முயற்சியிலேயே நேற்று முழுவதும் படையினர் தீவிரமாக ஈடுபட்டனர். எனினும் படை

(4-ம் பக்கம் பார்க்க)

## கவசப் படையின் தாக்குதல் ஆரம்பம்

(கொழும்பு)
வலி.வடக்கில் நேற்று ஆரம்பமான கடும் யுத்தத்தில் கவச படைப்பிரிவு பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கேர்ணல் சரத்முனசிங்க கூறியுள்ளார்.
விமானப்படை, கடற்படையின் உதவியுடன், தரைப் படையும் கவசப்படையும் பாரிய தாக்குதலை ஆரம்பித்

[4ம் பக்கம் பார்க்க]

## படையினர் முயற்சி முறியடிப்பு; 19 இராணுவம் உயிரிழப்பு

[கொழும்பு]
தெல்லிப்பழைப் பகுதியில் நேற்று புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் 19 படையினர் பலியானதாகவும், 26 படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
விமானங்கள், ஹெலிகொப்டர்கள் பீரங்கிகளின் உதவியுடன் படைகள் இப்பகுதியில் புலிகளுடன் சண்டையிட்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.
படையினரின் நேற்றைய முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.
தெல்லிப்பழைப் பகுதியில் இருந்து மாதகல் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற போதே புலிகள் மேற்கொண்ட பலத்த எதிர்த் தாக்குதலிலேயே இவர்கள் கொல்லப்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.
[ரி-சி]

## மும்முனைத் தாக்குதலிலும் காயமடைந்தோர் விபரம்

[யாழ்ப்பாணம்]
வலிமேற்கு, வலிவடக்குப் பகுதிகளில் நேற்றுக் காலை தொடக்கம் முப்படையினர் மேற்கொண்ட குண்டுவீச்சு, ஷெல்வீச்சு, பீரங்கித் தாக்குதல், துப்பாக்கிச்சூடு, கிரனைட், ரொக்கட் லோஞ்சர் தாக்குதல்களில் 50 பேர் வரை படுகாயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்
அவர்களின் விபரம் வருமாறு:
எம் இராசேஸ்வரி (53

2 ம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் பகுதி முழுவதும் அகோர விமான தாக்குதல்

(சித்தன்கேணி)
சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, பொன்னாலை, சுழிபுரம் ஆகிய பகுதிகளைச் சுற்றி நேற்று அதிகாலை 6 மணி தொடக்கம் வட்டமிட்ட 3 பொம்மர் குண்டு வீச்சு விமானங்கள் வட்டுக்கோட்டை புளியடிச் சந்தியிலும், தொல்புரம் மேற்கில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கியும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.
வட்டுக்கோட்டை புளியடிச் சந்தியில் மேற்கொண்ட இரண்டு குண்டு வீச்சினுல் ஐந்து பேர் படுகாயமடைந்தனர். அங்குள்ள வைரவர் ஆலயம் உட்பட மூன்று வீடுகள் பலத்த சேதமுற்றன பல வீடுகளின் கண்ணுடிகள் உடைந்து நொருங்கின. 3 நாய்களும், ஒரு பசு மாடும் துடிதுடித்துப் பலியாகின. பல கோழிகள் இறந்தன. மூன்று பசு மாடுகள் படுகாயமடைந்துள்ளன.

(4ம் பக்கம் பார்க்க)

## நாள் முழுவதும் விமான தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
வலி-வடக்கு, வலி-மேற்குப் பகுதிகளான தெல்லிப்பளை, விளான், மல்லாகம், சுன்னுகம், அளவெட்டி, இளவாலை, கொல்லங்கலட்டி, அம்பனை, பண்டத்தரிப்பு, சில்லாலை, சேந்தாங்குளம், வலித்தூண்டல், சுழிபுரம், மாதகல், வட்டுக்கோட்டை, சித்தன்கேணி ஆகிய பகுதிகளை நேற்று அதிகாலை முதல் மாலை வரை விமானக்குண்டு வீச்சுத் தாக்

[4-ம் பக்கம் பார்க்க]

## பலாலி முகாமில் முப்படைத் தளபதிகள்

(கொழும்பு)
வடபகுதியில் ஆரம்பித்துள்ள பாரிய இராணுவ நடவடிக்கையை பலாலியில் முப்படைகளின் தளபதிகளும் திட்டமிட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் வடபகுதியில் ஊரடங்கு தொடர்ந்து அமுலிலிருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ஹெலியிலிருந்து கிரனைட் வீச்சு பத்துப்பேர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]
மானிப்பாய் - கோண்டாவில் பகுதியில் நேற்றுக்காலை 10 30 மணியளவில் குடிமனைகளை வட்டமிட்ட ஹெலிக்கொப்டரொன்று வீதியால் சென்றவர்களை நோக்கி கிரனைட் தாக்குதல்களை மேற்கொண்டது.
மானிப்பாய் வீதி ஆஸ்பத்திரிக்கருகில் இடம்பெற்ற கிரனைட் வீச்சில் 10ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தோர் விபரம்: திருமதி நிர்மலாதேவி கிருஷ்ணபிள்ளை [44-வயது, சந்தையடி, மானிப்பாய்], திருமதி இராசேஸ்வரி இராசேந்திரம் [32 வயது. ஆனந்தா வீதி, மானிப்பாய்], கந்தையா சிவானந்தன் [49-வயது, வைமன் வீதி நல்லூர்], பரஞ்சோதி கேதீஸ்வரன (7 வயது மானிப்பாய்), அப்புத்துரை யேசுராசா [38வயது இணுவில் வீதி - மானிப்பாய்] அருணுசலம் போகேஸ்வரன் [33-வயது மானிப்பாய்], திருமதிசந்திரேஸ்வரி இரட்ணசிங்கம் [45-வயது கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்].

கோண்டாவில் மேற்கு கே. கே. எஸ் வீதியில் ஹெலி மேற்கொண்ட கிரனைட் வீச்சில் இருவீடுகளும்சேதமாகின.
(56)

# வரி விளம்பரம்

### "மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்"

சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய புதிய நாவல் விற்பனையாகிறது. "மீரா" பிரசுரங்களில் இணைக்கப்பட்டிருக்கும் ஐந்து கூப்பன்கள் சேர்ந்ததும் மீரா விற்பனையாளரிடம் கொடுத்து ரூபா 50/- பெறுமதியான மீரா நாவலை அன்பளிப்பாக பெறுங்கள்.

(சி-6408)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியர் சி இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(சி 6319)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெளிவாரிப் பட்டப்படிப்பு

கலை / வர்த்தக முதற்கற்கை நெறிகள்

## இலங்கை ஆய்வியல்

இலங்கை ஆய்வியல் கற்கை நெறிக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள உசாத்துணை நூல்களில் ஒன்றான "பேராசிரியர் நித்தியானந்தனால்" எழுதப்பட்ட "இலங்கை அரசியற் பொருளாதார அபிவிருத்தி" (1948-1956) கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் விற்பனைக்குண்டு. (விலை 150/-)

பதிவாளர்.

(எ-2210)

## இன்று

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் விபுலானந்தர் நூற்றாண்டு விழா இன்று 12-ந் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

(71)

இன்று

## விபுலானந்தர் நூற்றுண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ் மன்றமும், மறுமலர்ச்சிக்கழகமும் இணைந்து நடாத்தும் 'விபுலாநந்த அடிகளார் நூற்றுண்டு விழா' யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று பி. ப. 2-00 மணிக்கு ஆரம்பமாகிறது.

இன்றைய விழாவில் ஆசியுரைகள், வாழ்த்துரை. நூல் வெளியீடும் வெளியீட்டுரையும், நூல் ஆய்வுரைகள், சிறப்புச் சொற்பொழிவு, நாட்டிய நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

(சி)

## முழ்முனைத் தாக்குதலிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வயது), அளவெட்டி வடக்கு. திருமதி இந்திராணி சுந்தரலிங்கம் (43 வயது), அளவெட்டி, திருமதி விசயலக்சுமி கனகரட்ணம் (35 வயது) அளவெட்டி வடக்கு. த. தர்மராசா (42 வயது) கந்தரோடை, இராமகிருஷ்ணமூர்த்தி பசுபதி (7 வயது) சுழிபுரம் மேற்கு, திருமதி பதுமராணி பத்திராசா (30 வயது) மல்லாகம், செல்வி சுகிதா சந்திரன் (10 வயது) மல்லாகம், எஸ். பாலகுமார் (38 வயது) அளவெட்டி வடக்கு, கே. விமலேஸ்வரி (21 வயது) அளவெட்டி வடக்கு, திருமதி பி. சுந்தரலிங்கம் (45 வயது) அளவெட்டி வடக்கு, திருமதி ராஜேஸ்வரி கணேசன் (38 வயது) மல்லாகம், அன்னபூரணம் சந்தியா (48 வயது) மல்லாகம், செல்வி வனஜா நாகலிங்கம் (19 வயது) இளவாலை வடக்கு, பரஞ்சோதி கேதீஸ்வரன் (9 வயது) மானிப்பாய், திருமதி இராஜேந்திரம் இராஜராணி (33 வயது) இளவாலை, அருணகிருஷ்ணபிள்ளை (27 வயது) இளவாலை, திருமதி ஜீவராணி (32 வயது) தெல்லிப்பழை, திருமதி பாக்கியம் பொன்னுண்டோ (55 வயது) மல்லாகம், திருமதி ராசலக்சுமி பற்குணராசா (38 வயது) முள்ளானை, இளவாலை, ம்க சிவநாதன் (49 வயது) வைமன் வீதி, நல்லூர், கே. பசுபதி (60 வயது) ஆனைக்கோட்டை, திருமதி நிர்மலாதேவி கிருஷ்ணபிள்ளை (41 வயது) மானிப்பாய், வி இராபச்சந்திரன் (47 வயது) சுன்னாகம் ஸ்ரேசனடி, சின்னத்துரை [72 வயது] சுன்னாகம் வடக்கு, திருமதி மீனாட்சி சின்னத்துரை [80 வயது] சுன்னாகம் வடக்கு, கே. தங்கவேல் (57 வயது) இளவாலை, எஸ் இராசரட்ணம் [47 வயது] தாவடி வடக்கு, கே. பாலேந்திரா [18 வயது] தாவடி வடக்கு, எஸ். பிலிப்ஸ் [73 வயது] இளவாலை, கே. பூதப்பிள்ளை [75 வயது] சுன்னாகம், எஸ். நந்தகுமார் [11 வயது] இளவாலை, மயிலங்கூடல், திருமதி சுகுணகுமார் [40 வயது] இளவாலை, நாகராசா விமலதாஸ் [48 வயது விளான், செல்வி ஜரோனி சந்திரன் [7 வயது] மல்லாகம், சந்திரன் ஜரோன் [10 வயது] மல்லாகம், அருணசலம யோகேஸ்வரன் [35 வயது] மல்லாகம், திருமதி சந்திரேஸ்வரி இரட்ணசிங்கம் [45 வயது] கச்சேரி கிழக்கு, செல்லப்பா குணரட்ணம் (69 வயது] கோண்டாவில் மேற்கு, கந்தையா கிருபானந்தன் [49 வயது] வைமன் வீதி, நல்லூர், திருமதி இராசராணி இராசேந்திரம் [32 வயது] மானிப்பாய் கே. பசுபதி [60 வயது] மானிப்பாய், குணபாலசிங்கம் பாலேஸ்வரன் [18 வயது] தாவடி வடக்கு, செல்லையா ராசரட்ணம் [47 வயது] தாவடி வடக்கு.

காயமடைந்த பலர் சங்கானை வைத்தியசாலை, மூளாய் வைத்தியசாலை மற்றும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

[56]

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடிமேற்கு கலைவாணி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அதிபர் ப. செல்லத்துரை தலைமையில் இன்று 12ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டியில் சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் செல்வி ரெபேக்கா பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

## இராசிபலன்

12- 06-1992 வெள்ளிக்கிழமை (தமிழுக்கு வைகாசி 30)

துவாதசி மு. ப.10-33 வரை சுவாதி காலை 7-37 வரை. பிரதோஸவிரதம் இராகு காலம் காலை 10 - 23 முதல் 11-52 வரை சுபநேரம் மாலை 5-52 முதல் 7-22 வரை.

மேஷம்: அறிஞர் சந்திப்பு, ஆத்மீகசிந்தனை, உபசாரம்.

இடபம்: தொழில் முதலீடு, பயணம் கைகூடல், குடும்ப சுகம்.

மிதுனம்; காரிய தாமதம், மனகுழப்பம், யோசனை.

கடகம்; இனசனப்பகை, குறைகேட்டல், வீண்செலவு.

சிங்கம்; மனதுக்கினிய சம்பவம், உறவினர் உதவி, விருந்து வைபவம்.

கன்னி:வீண்துயரம், குடும்ப செலவு, அதிகாரிகள் சினம்.

துலாம்: தொழில் லாபம், மனைச்சிறப்பு, காரியசித்தி.

விருச்சிகம்: அநாவசியதலையீடு. ஏமாற்றம், சபலம்.

தனுசு: புத்திரர் பெருமை, தானதர்மம், கடன் வசூல்.

மகரம்:பணியாளர் நன்மை, வேலைப்பழு, வாக்கு வன்மை

கும்பம்: இனசன வருகை, குடும்ப உறவில் விரிசல் தப்பபிப்பிராயம்.

மீனம்: வேண்டாதபகை, மனச்சுமை, தனிமைப்படல்.

— ஜோஸ்யர்

## வதிரி டயமன்ட்ஸ் சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

வடஅல்லை நக்கீரன் வி.க. நடாத்திய வீரவேங்கை ஆதவன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வதிரிடயமன்ட்ஸ் விளையாட்டு கழகம் சாம்பியனாகியது.

கடந்த ஞாயிறு நடைபெற்ற இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ட்ஸ் கலட்டி ஐ. வி. கழகத்தை 5 ற்கு 2 என்ற கோல் கணக்கில் வென்று சாம்பியனாகியது. இச்சுற்றுப் போட்டியில் வடமராட்சியின் பிரபல கழகங்கள் பங்குபற்றின.

(சி)

## இன்று முதல் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தீவிலும் உலகிலும் உள்ள இந்துக்கோயில்கள் பாதுகாக்கப்படவும், ஈழத்தமிழ்மக்கள் யுத்தத்தினால் படும் துன்பதுயரங்களும். அவலங்களும் நீங்கி, அனைத்து உயிரினங்களும் அமைதி சமாதானம் பெற இன்று முதல் தொடர்ந்து வெள்ளிக்கிழமைகளில் சகல கோயில்களிலும் சிறப்பு பிரார்த்தனை இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையும், நல்லை ஆதீனமும் அறிவித்துள்ளன.


## தென்மராட்சி மக்களுக்கு ஓர் நற்செய்தி

உங்களுக்குத் தேவையான

- ★ உடனடி பேக்கரித் தயாரிப்புகள்
- ★ சிற்றுண்டி வகைகள்
- ★ இனிப்பு, ரொபி, சொக்கிளேற் வகைகள்
- ★ குளிர்பானம் தயாரிக்கும் பொருட்கள்
- ★ கேக் தயாரிக்கும் பொருட்கள்
- ★ தினந்தினம் மாறுபடும் குளிர்பானங்கள்
- ★ வீடுகளில் நடைபெறும் விழாக்களுக்கான

சிற்றுண்டிகள், கேக் வகைகள் என்பவற்றை உடனடியாகவும் ஓடர் மூலமும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்

## "சுவையகம்"

பிரதான வீதி,

(யூனியன் பெற்றோல் நிலையத்திற்கு அருகாமை)

சாவகச்சேரி.

(எ-2013)


## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தையா வேலுப்பிள்ளை

(முன்னாள் யாழ். மாவட்டத் தொலைத் தொடர்புப் பொறியியலாளர்)

| தோற்றம்: | மறைவு: | திதி: |
|---|---|---|
| 17-02-1940 | 21-05-1986 | 12-06-1992 |

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குலவிளக்கே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே! நீங்கள் எம்மைப் பிரிந்து இன்றுடன் ஆறு ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டாலும், உங்கள் அன்புமுகம் ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையவே மறையாது! தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"வேல் அகம்" குருக்கட்டு,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

(சி-6394)

## 11ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 22-12-1924

உதிர்வு: 14-06-81

### அமரர் வ. இராசையா

(முன்னைநாள் சிவா ஸ்ரோர் உரிமையாளர், யானை, பெப்ஸி குளிர்பான முகவர்)

அன்பின் திரு உருவமாய் பண்பின் பிறப்பிடமாய் எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எம்மை எல்லாம் வழிநடத்திய அன்புத் தெய்வமே எம்மை பிரிந்து ஆண்டு பதினொன்று சென்றிடினும் உங்கள் நினைவலைகள் என்றென்றும் எம் நெஞ்சத்தில் ஒளி வீசிக் கொண்டே இருக்கின்றது. உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

சிவா ஸ்ரோர்ஸ்,
65, சிவன்பண்ணை வீதி.
யாழ்ப்பாணம்.

(சி-6413)

# புலிகள் ஆதரவாளர்கள் மீது பொலிஸார் தீவிர கண்காணிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் அமைப்புக்களை தமிழ்நாடு பொலிசார் கவனமாக கண்காணித்துவருவதாக தமிழகபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேவாரம் தெரிவித்துள்ளார்.

புலிகள் இயக்கத்திற்கு மத்திய அரசு தடைவிதித்த பின்னர் தமிழக கடலோர பகுதிகளில் பொலிசாரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் கடலோரப்பகுதிகளிலிருந்து டீசல் எண்ணை மற்றும் பொருள்கள் கடத்தப்படுவது தடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் பொலிசாருக்கு வழங்கப்பட்டுள்ள 'வயலர்ஸ்' தொழில் நுட்பம் சிறந்ததாக திகழ்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (கே)

## பென்சன் வவுச்சர்

(மானிப்பாய்)

மே மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலகத்திலிருந்து 9-ந் திகதி உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வவுச்சர்களைப் பெற்றுக் கொண்டவர்கள் தத்தமது வங்கிகிளையில் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாமென்று ஓய்வூதியப் பிரிவு உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்படுகிறது. (71]

## ஒலிம்பிக் குழுவில் 'தீபிகா'விற்கு இடமில்லை

(கொழும்பு)

ஸ்பெயினில் அடுத்த மாதம் 23ம் திகதி நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ள பத்துப்பேர் கொண்ட இலங்கைக் கோஷ்டி ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இலங்கையில் நடைபெற்ற ''சாவ்'' விளையாட்டுப் போட்டியில் கூடிய தங்கப் பதக்கங்களை இலங்கைக்குப் பெற்றுச் கொடுத்த செல்வி தீபிகா சண்முகம் இக்குழுவில் இடம்பெறவில்லை. அதேநேரம் நீச்சல் வீரர் யூலியன் போலின் இக் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார். (வி)

## வலி - வடக்குப் பகுதி அலுவல்கள் பாதிப்பு

(காங்கேசன்துறை)

மல்லாகம். துர்க்காபுரம் ஆகிய பகுதிகளில் இயங்கி வந்த அரச அலுவலகங்கள், பாடசாலைகள், தபால்நிலையங்கள் போன்றவை முழுமையாக இயங்கமுடியாத சூழ்நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் மல்லாகம், துர்க்காபுரம் பகுதிகள் கடுமையான தாக்குதலுக்குள்ளானதாலும் மேற்படி இராணுவ நடவடிக்கை முற்றுப்பெற்று விட்டதா? என்பதை தீர்மானிக்கமுடியாதிருப்பதாலும். இப் பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்திருப்பதாலும் மேற்படி ஸ்தம்பிதநிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இப்பகுதிகளில் இயங்கிய பாடசாலைகளுக்கு மாணவர்கள் வராமையால் ஆசிரியர்கள் வந்து இருந்துவிட்டு சல்கிறார்கள். (86)

## தெரிவுக் குழுவில் மீண்டும் சுதந்திர கட்சி

(கொழும்பு)

இனப்பிரச்னை தொடர்பாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் மீண்டும் டங்குபற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானம் எடுத்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு நேற்றுமுன்தினம் மாலை கூடி, இதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

தெரிவுக்குழுத் தலைவர் மங்களமுனசிங்கவும், தமிழ் அரசியல் கட்சிகளும்சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர்களை சந்தித்து மீண்டும் தெரிவுக் குழுவில் சேர்ந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (கே)


## அரசாங்க அறிவித்தல்
### சுகாதார சேவைகள் திணைக்களம்
### சுருக்கெழுத்தாளர் பதவி

சுகாதாரசேவைகள்பணிமனையில் அமைய ஆங்கில சுருக்கெழுத்தாளர் பதவிக்கு கீழ்க்காணும் தகைமைகளையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ 19-06-92ம் திகதி அல்லது அதற்கு முன்பாகவோ இப்பணிமனையில் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

தகைமைகள்:

01. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

02. வயது: 18 ற்கும் 40 இற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

03. சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் குறைந்தது விசேட சித்தியுடன் தமிழ்மொழி, கணிதம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

04. சுருக்கெழுத்து நிமிடமொன்றிற்கு 75 சொற்களிற்குக் குறையாமலும் தட்டச்சு வேகம் நிமிடமொன்றிற்கு 35 சொற்களிற்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

வேதனம்:

நாளொன்றிற்கு ரூபா 55.20 வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கும் செய்முறைப் பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும்.

சுருக்கெழுத்தாளராக அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுடைய விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பொ. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள் பணிமனை,
இல. 57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (எ 2221)


## சில்லாலை தும்பளைப்பாய் புனித அந்தோனியார் ஆலய 4-வது ஆண்டு சிறப்பிதழ் [13-6-92]

மாமரி மைந்தனைக் கரமதில்
தாங்கிட
மாதவமே செய்திட்ட
உயரிய உத்தமனே
நாதனும் அவர்வழி
காட்டிட ஒளியானாய்
பாதமலர் தனை பற்றியே
பணிகின்றோம்.

அருளொளி தவழும் முகத்துடன் மாமரி மைந்தன் இயேசுவை கரமதில் தாங்கி அன்புருவாக மக்கள் துன்ப

### பங்குத் தந்தை செய்தி

வற்றாத வளங்களைவழங்கி வையத்தில் எல்லா மக்களாலும் கோடி அற்புதரென்று புகழ்நாமம் பெற்ற புனித அந்தோனியார் என்றுமே எல்லோருக்கும் பேருபகாரியாய் விளங்குகின்றார். கேட்ட வரத்தை இறைவனிடம் இருந்து பெற்று வழங்கும் புனித அந்தோனியாரை மகிமைப்படுத்த நம் பங்கை சேர்ந்த விவசாயிகள் நன்றியுணர்வுடன் தங்கள் விளை நிலங்கள் மத்தியில் அவருக்கென ஓர் திருத்தலத்தை அமைத்து அவரை வணங்கி வருகின்றனர்.

உள்ளத்தூய்மையிலும், உத்தம தளத்திலும் ஏனையோருக்கு எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழ்ந்த புனிதர் தமது பக்தர்கள் தமதடிச் சுவட்டிலே வாழ இன்றியமையாத அருள்களை இறைவனிடம் பெற்று வழங்குவாராக. உடலை வருத்தி அருட்பிரயாசைகள் மத்தியில் அவர்கள் கையிடும் முயற்சிக்கு தகுந்த அறுவடைபெற புனித அந்தோனியார் தமது பரிந்துரையின் மூலம் அருள்வாராக.

ம ம. வே. அமிர்தக்குமார்

துயர் தீர்க்க நந்தாவிளக்காக தும்பளைப்பாய் மருதநிலத்திடை எழுந்தருளி அருள் வழங்கிக் கொண்டிருக்கிறார் புனித அந்தோனியார். புனிதர் எழுந்தருளி இருக்கும் சூழல் கழனிகள் நிறைந்த விதை நிலங்களிடையே சில்லாலையில் இருந்து மாதகலுக்கு வயல்களினூடு செல்லும் பிரதான சாலையருகே அமைந்துள்ளது.

பல இனமக்களும் வாழும் கிராமங்களாகிய சில்லாலை, சாந்தை, மாதகல் என்பனவற்றிற்கு பொதுவான இடத்தில் அமைந்துள்ளதால் அனைவரும் இப்புனித தலத்திற்கு வருகை தந்து எவ்வித பேதமும் இன்றி புனிதரை தரிசித்து மனமகிழ்வுடன் செல்கின்றனர்.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் புனிதரின் விசேட

### "மருத நிலத்திடையே ஓர் பேரொளி"

நாளாக அனுஷ்டிக்கப்பட்டு அதிகமானோரின் வரவால் பொலிவு பெற்று விளங்குகின்றது.

திரு. கபிரியேல்பிள்ளை டொன்பொஸ்கோ, திரு. மார்க்கண்டு இராமலிங்கம் என்போர் இக்கோயிலை அடியிட்டவர்களில் முக்கியமானவர்கள். தரிசாகக் கிடந்த நிலத்தை துப்புரவுசெய்து முக்கியமாக தங்கள் உடலுழைப்பைக்கொண்டும் சிறு முதலைக்கொண்டும் இதனை அடியிட்டனர். நாளாக இவர்கள் உற்சாகத்தைக்கண்டு ஈர்க்கப்பட்ட அயலிலுள்ள பலரும் இன, மத பேதமின்றி புனிதருக்கு தலம் அமைக்க முன்வந்து உதவி தந்தார்கள். திரு. டொன்பொஸ்கோவின் தலைமையில் ஆரம்பித்து நடாத்தப்பட்ட இத்திருப்பணிவேலைகள் பணமுடையினால் இடையில் நின்றுபோய்விடும் நிலையில்இருந்தது. கோவில் கட்டுவதற்கு உதவிசெய்வதாக வாக்குறுதி தந்த சிலர் தங்கள் சொல் காக்கத் தவறியமையால் இவருடைய உற்சாகமும் சிறிது தளரத்தான் செய்தது.



இருப்பினும் புனிதரின் ஆசியும் விடாமுயற்சியுடன் கூடிய கடின உழைப்பும் கட்டிட வேலையைப் பூர்த்திசெய்யக் காரணமாகியது. இந்நிலையில் அங்கு ஆராதனைகளை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியிலே முதற்கண் அழகுமிழிரும் திருச்சொரூபங்கள் திரு. ஏ ஜே. இம்மானுவேலினால் (அருமை) அன்பளிப்பு செய்யப்பட்டு, அவயனைத்தும் அன்றைய பங்குக் குரவர் அருட் திரு. பொணிபஸ் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு கோவிலிலே ஸ்தாபிக்கப்பட்டது. தொடர்ந்து காணியின்உரிமை கோவிலுக்குச் செல்வதற்கான பாதை போன்றவற்றிற்கான உறுதி மூலமான உரிமை தாமதமாகியதால் தடை ஏற்பட்டது. இந்நிலையில் திரு டொன்போஸ்கோ மனத்தைத் தளரவிடாது இரளும் பக்தர்களினால் கிடைக்கப்பெறும் நிதி வளங்களைப் பாதுகாத்துப் பேணவேண்டிய உயர்ந்த நோக்கை மனதில் கொண்டும், திருப்பணி வேலைகளுக்கு எவ்வித குந்தகமும் ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தோடு, ஸ்தலத்தைப் பாதுகாப்பதற்கு ஓர் பரிபாலன சபையை நிறுவினர். இதன் உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர், போஷகராக திரு. கபிரியேல்பிள்ளை டொன் பொஸ்கோவும். தலைவராக வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பியும், உப தலைவராக திரு. ஆர். சூசைப்பிள்ளையும், செயலாளராக திரு. எஸ். எப். சேவியரும் உப செயலாளராக திரு. தம்பி ஐயா அரிகரனும், நிதிக் குழு உறுப்பினர்களாக திரு. அ. டொன்பொஸ்கோ, திரு. கே. ஆனந்தகுமார், திரு ஏ. செபமாலைமுத்து ஆகியோரும் மேலும் ஆறு பேர் கொண்ட ஓர் நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

புனிதரின் அருட்பொலிவுடன் இலங்கும் இத்தலத்தில் கடந்த 3 ஆண்டுகளாக ஆனித் திங்கள் 13-ம் திகதி புனிதரின் திருநாளான அன்று சிறப்பு வழிபாடுகளை நடத்தி அன்னதானமும் கொடுக்கப்பட்டுவந்தது சிலவருடங்களாக வானம் பார்த்த பூமியாக இருந்த சில தும்பளைப்பாய் விளை நிலங்கள் புனிதரின் அருட்பார்வையினால் இப்போது நல்ல விளைச்சலைப் பெற்று மக்களுக்கு உயர்ச்சியை அளிக்கிறது. இதனால் அங்கு விவசாயம் செய்து நன்மை பெற்றோரே தமது நன்றிக் கடனாக அன்னதானத்திற்குத் தேவையான பொருள்களை தந்துதவுகின்றனர். மேலும் ஒவ்வோர் செவ்வாய் கிழமையும் பெருந்தொகையான சைவர்கள் அங்கு கூடுவதையும் புனிதரினால் தனக்குக் கிட்டிய நன்மைகளுக்கு நன்றிக் கடனாக புனிதரை வணங்கியும் அன்னதானம் செய்தும் அகமகிழ்வதைக் காணலாம்.

புனிதரின் விழாவும் அதை தொடர்ந்து நடைபெறும் அன்னதானம், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு தேவையான நிதி அயலிலுள்ள பக்தர்களினாலேயே வழங்கப்படுகிறது. இவ்நிதி அனைத்தையும் பேணி பாதுகாக்கும் பொறுப்பு நிதிக் குழுவைச் சார்ந்தது. அவர்களே வருடம் தோறும் தகுதி வாய்ந்த கணக்காய்வாளர்களைக் கொண்டு ஸ்தலத்தின் வரவு-செலவு அனைத்தையும் நிர்ணயிக்கின்றனர்.

வேண்டுபவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் அவரவர் பக்குவம் அறிந்து ஈர்ந்து கவலையைப் போக்கி களிப்பினை உளத்தில் தேக்கி ''யாமிருக்க பயமேன்'' என்று கூறுவது போல் அபயக்கரம் காட்டி அருள்வழங்கிக் கொண்டிருக்கின்றார் புனிதர், வழமை போல் இவ்வருடமும் தலத்தில் எமது பங்குக்குரவரின் அனுசரணையுடன் சிறப்பு வழிபாடுகளும் அன்னதானமும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற

சுகந்தன் இன்னாசித்தம்பி
தலைவர்
பரிபாலனசபை

உள்ளன. இவைகள் அனைத்தும் புனிதரின் பெருமைகளை சிறப்பிப்பதோடு வருகை தரும் பக்தர்களுக்கு பக்திப் பரவசம் ஊட்டுவதாக அமையும், கோயில் பரிபாலன சபையினர் விழாக் கொண்டாட்டத்தில் ஆக்கமுடன் செயற்பட்டு விசேட முறை

[4ம் பக்கம் பார்க்க]

# வடக்கு-கிழக்கு முழுவதும் முப்படைகள் உசார் நிலையில்

## - படைத் தலைமையகம் அறிவிப்பு -

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் முப்படைகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்து இரு வருடங்கள் பூர்த்தியடைந்ததையொட்டி புலிகள், சிறிலங்கா படைகள் மீது பாரிய தாக்குதலைத் தொடுக்கலாமெனக் கருதியே படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை வடபகுதியில் பெருமளவு படைகள் குவிக்கப்பட்டுள்ள முகாம்களும் பலப் படுத்தப்பட்டுள்ளதாம். (சி)

# வலிவடக்கு மக்களுக்கு உதவ விரும்புவோருக்கு அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வலி-வடக்கிலிருந்து இராணுவ நடவடிக்கைகளால் வெளியேறும் மக்களுக்கான அவசர உணவு விநியோகத்தை சீராக வழங்க முடியாமல் வான் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதால் பொது நல ஸ்தாபனங்கள், இம்மக்களுக்கு உதவிவழங்க விரும்புபவர்கள் தமிழர் புனர் வாழ்வு கழகத்துடன் தொடர்புகொண்டு இடம் பெயர்கின்ற மக்களது உடனடி தேவைகளை ஈடுசெய்ய முன்வரவேண்டுமென கேட்கப்படுகிறார்கள்.

தொடர்புகொள்ள வேண்டிய இடங்கள் 83/2, காங்கேசன்துறை வீதி கொக்குவில், சண்டிலிப்பாய் வீதி, அளவெட்டி தமிழர் புனர் வாழ்வுக் கழக காரியாலயங்கள், மருதனுமடம் சர்வோதயம் பிரதேச அலுவலகம்.

# பொதுமக்களுக்கு அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்வீதி, ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன்துறை வீதிகளில் காயப்பட்ட நோயாளர்களை கொண்டு வரும் சமயங்களில் கூடியளவு ஒதுங்கிநிற்கும்படி கேட்கப் பட்டுள்ளது.

ஆபத்தான நிலையில் கொண்டுவருகின்ற மக்களை வைத்தியசாலைகளுக்கு அதிக வேகமாக பொதுமக்களாலும், ஆஸ்பத்திரி ஊழியர்களாலும் அம்புலன்ஸ்வண்டிகளிலும், வாகனங்களிலும் விரைந்து கொண்டுவருவதற்காக, வீதிகளில் வாகனங்களில் செல்லும் மக்கள் அந்நேரத்தில் ஒதுங்கிநின்று ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

[56]

# இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையால் யாழ் வைத்தியசாலையில் படுகாயங்களுக்குள்ளாகி அனுமதிக்கப்பட்டுவரும் நோயாளர்களைக் காப்பாற்றுவதற்கு உடனடியாக பலதரப்பட்ட குறூப் இரத்தம் அவசரமாக தேவையாக இருக்கிறது.

இன்றைய நெருக்கடி சூழலில் உடனடியாகத் தொடர்புகொண்டுஇரத்ததானம்செய்ய முன்வரும்படி யாழ் வைத்தியசாலை இரத்த வங்கியினர் அறிவித்துள்ளனர். [56]

## மாணவர் உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

யாழ் ப. நோ. கூ. ச. கிளைகளில் திங்கட்கிழமை தொடக்கம், கடந்த வருட கார்த்திகை மாதத்திற்குரியதும், இவ்வருடம் பங்குனி மாதத்துக்கு உரியதான பாடசாலை உணவு முத்திரைகளுக்கும் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (வி)

# மாதகல், இளவாலை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மாதகல் இளவாலைப் பகுதி குடியிருப்புக்கள் நோக்கி நேற்றுக் காலை 5 மணி தொடக்கம் கீரிமலைக் கடற்பரப்பில் நிலைகொண்டிருக்கும் பீரங்கிப் படகுகள் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

இத்தாக்குதலில் செல்வி அருணா கிருஷ்ணபிள்ளை (27 வயது), மயிலங்காடு, இளவாலை, திருமதி ராசலக்சுமி பற்குணராசா (38 வயது), முள்ளானை, இளவாலை ஆகியோர் காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

## சில்லாலை

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் வழிபாடுகளை ஒழுங்கு படுத்த ஆர்வமுள்ளவராய் உள்ளனர்.

துன்பமும் துயரமும் அல்லலும் அவலமும் நிறைந்த இவ்வுலக வாழ்க்கையிலே எ..மையே இழந்து கொண்டிருக்கும் நாம் காணமல் போனவைகளை கண்டறியச் செய்யவரும் புனிதருமான அந்தோனி முனீந்திரனின் அ..யக கரத்தால கைநூட்கப் பட்டவரின் புதுவாழ்வு அடைவோம். புனிதரின் திருத்தோற்ற பொலிவைக் கண்டு அவர் பாதாரவிந்தங்களில் பணிந்து பெரும்பேறு அடைவோம்.

"நீயுந்தன் கைநீட்டித்
தூக்குகின்றாய்
சேயெந்தன் துயர்யாவும்
போக்குகின்றாய்."

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகளில் அமுலில் இருந்துவந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணியுடன் நீக்கப் பட்டதாக கூட்டுப்படை தலைமையகம் நேற்று தெரிவித்தது.

யாழ்ப்பாண குடாநாட்டில் படையினரின் கட்டுப்பாடுகள் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் ஊரடங்கு சட்டம் மறு அறிவித்தல்வரை அமுலில் இருக்குமெனவும் கூட்டுப் படை தலைமையகம் மேலும் தெரிவித்தது. (க)

## விளான்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ந்த திருமதி பேபி ஆறுமுகம் [37 வயது], அம்பலவாணர் சிவக்கொழுந்து [72 வயது], இரத்தினம் யோகநாதன் (33 வயது) ஆகியோர் உடல் சிதறிப் பலியானார்கள்.

இளவாலை முள்ளானை வாழைத் தோட்டத்தில் கீரிமலையிலிருந்து நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதலில் ஒரு வயோதிபர் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவரது விபரம் கிடைக்கவில்லை.

இதேவேளை வலி-வடக்கு வலி-மேற்கு பகுதிகளில் பல இடங்களில் இடம்பெற்ற முப்படை தாக்குதலில் 80 பேர் வரை காயமடைந்து பல ஆஸ்பத்திரிகளில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். (சி-56)

## கவசப்படை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த படை நடவடிக்கை எவ்வளவு நாட்கள் நடைபெறும் என்பதை கூறமறுத்த கேர்ணல் முனசிங்க இது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் என்றார். [சி-க]

## வலிகாமம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படுகாயமடைந்தவர்களுள் கார்த்திகேசு கனகசபை (60-வயது) என்பவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்து வட்டு. புளியடிச் சந்தியடியிலிருந்த பொ. அன்னலட்சுமி என்பவரின் வீட்டில் இருந்த வேலுப்பிள்ளை சிவசுப் பிரமணியம் (வயது-65) சரவணமுத்து கோமளவல்லி (வயது-55), சரவணமுத்து தேவராணி [வயது-25] ஆகியோரும் ஆறுமுகநாதன் யுக சொரூபி (வயது-45) என்பவரும் படுகாயமடைந்துள்ளனர்.

தொல்புரம் மேற்கில்நடத்தப்பட்ட குண்டு வீச்சில் இரண்டு வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன. ஒரு சிறுமி பலத்த காயமடைந்துள்ளார்.

இப்பகுதிகளில் பொம்மர் விமானங்கள் பல தடவைகள் வட்டமிட்டதையடுத்து மக்கள் பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக் கொண்டதனால் தெய்வாதீனமாக உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை.

### ஹெலி தாக்குதல்

பொம்மர்கள் குண்டுத்தாக்குதல்களை மேற்கொள்ளும் போதும், தாக்குதலை நடத்திய பின்பும் ஹெலி ஒன்று பொன்னாலை, மாதகல் ஆகிய இடங்களில் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு கடுமையாக சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

நேற்றுக்காலை 5-35 மணியளவில் சுழிபுரம் பகுதியை வட்டமிட்ட விமானங்கள் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டதில் சுழிபுரத்தைச் சேர்ந்தஇராசசுந்தரம்(காலஞ் சென்ற அதிபர்) வீட்டின் இருமருங்கிலும் இரண்டு குண்டுகள் விழுந்து வெடித்ததில் இராசசுந்தரத்தின் வீடு உட்பட ஐந்துக்கு மேற்பட்ட வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாகின. [137-139]

# க. பொ. த. [உ/த] பரீட்சை

[கொழும்பு]

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது

ஆகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகி 25 ம் திகதிவரை பரீட்சை நடைபெறும்.

பரீட்சை பிரவேச அட்டவணைகள் ஜூலை மாதம் 20-ம் திகதி முதல் அனுப்பி வைக்கப்படுமென்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (கே)

## மிதிவெடியில் சிக்கி படுகாயம்

[மட்டக்களப்பு]

கல்முனைக்குடி தீவு வெட்ட என்ற இடத்தில் இரு விவசாயிகள் வயல்களில் புதைத்து வைத்திருந்த மிதி வெடியில் சிக்கி படுகாய மடைந்தனர்.

## நாள் முழுவதும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குதல்களும், ஹெலித்தாக்குதலும், கடற்பரப்பிலிருந்து பீரங்கித் தாக்குதலும் முப்படைகளால் மேற்கொள்ளப் பட்டதில் நால்வர் பலியானதுடன் 80 பேர்வரை படுகாய மடைந்தனர்.

அதிகாலை 5-30 மணியளவில் பண்டத்தரிப்பு மாதகல் வீதியிலுள்ள வீடு ஒன்றில் குண்டு வீசப்பட்டதில் பலத்த சேதம் ஏற்பட்டது. மாதகல் துறைமுகப்பகுதியிலும் குண்டுகளை விமானங்கள் வீசின.

நேற்று காலை 7-30 மணியளவில் சுன்னாகம் சந்தைப் பகுதியில் ஹெலிஒன்று இரு ரொக்கட் தாக்குதலை மேற்கொண்டது. மல்லாகம் கிராம நீதி மன்றிற்கு அருகில் 3 பேர் விமானங்கள் நேற்று காலை 8 மணியளவில் மூன்று குண்டுகளை வீசின. மகாணப்பலம் என்னுமிடத்திலும் தாக்குதல் மேற்கொ..ளப்பட்டன.

நேற்று நண்பகல் 12 30 மணியளவில் சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கு அருகில் இரு குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டன. மற்றும் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகிலும் விமானங்கள் ரொக்கட் தாக்குதலை நடத்தின. பி. ப. 2-30 மணியளவில் விளான் சந்தியிலும் தாக்குதல நடாத்தப்பட்டது. (56-72-க)

# மரண அறிவித்தல்

## சகோதரன் ரொபின் ராஜகுலேந்திரன்

இலங்கை பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த தேவ ஊழியராகிய சகோதரன் ரொபின் ராஜகுலேந்திரன் அவர்கள் இம்மாதம் 8-6 92 திங்கட்கிழமை கர்த்தருடைய மகிமைக்குட் பிரவேசித்தார். அன்னாரது அடக்க ஆராதனை 10-06-92 புதன்கிழமை மட்டக்குளியிலுள்ள இலங்கை பெந்தெகொஸ்தே சபைச் சாலையில் இடம்பெற்றது.

[சி-6415] தகவல்: பாஸ்டர் பொணிபென்ஸ்சர்

## திருமதி கிறிஸ்தோப்பர் கத்தறீனம்மா

சில்லாலை தெற்கைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் கத்தறீனம்மா காலமாகிவிட்டார். அன்னார் காலம்சென்ற சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பரின் அன்பு மனைவியும், எட்வேட் பங்கிறுஸ் (ப. நோ. கூ. சங்கம் – பண்டத்தரிப்பு). நோபேட் பங்கிறுஸ் (பாறீன்), அல்பேட் பங்கிறுஸ் (சுவிஸ்லாந்து), றுபேட்பங்கிறுஸ் (காலஞ்சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்), மேரிஜெயநாயகி வில்வேட் பங்கிறுஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பங்கிறுஸ் திரேசம்மா, ருகினி, சறோயினி, ஸ்ரனிஸ்லோஸ், வலன்ரீனா ஆகியோரின் அன்பு மாமியாரும், டயானா, டெறிக், பன் செழியன், பன் கஜன் பிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், காலஞ்சென்ற றேமூந்துப்பிள்ளை சீமாம்பிள்ளை, காலஞ்சென்ற பார்பரம்மா, காலஞ்சென்ற மாகிறேற், றோசம்மா. சந்தியாப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு சில்லாலை சென். யேம்ஸ் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டப்படுகிறீர்கள்.

தகவல்: எட்வேட் பங்கிறுஸ் (மகன்)

சில்லாலை தெற்கு.
பண்டத்தரிப்பு. (சி-6417)

## முகாம் விஸ்தரிக்கவே

1ம்-பக்கத் தொடர்ச்சி;

சிங்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தெல்லிப்பழையிலிருந்து வடமேற்கு திசையாக முன்னேறும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர். அங்கு கடும் மோதல்கள் நடைபெற்றுவருகின்றன.

மேலும் பாதுகாப்புப்படையினர் வசம் உள்ள ஆயுதங்கள் அனைத்தும் வடபகுதியில் விடுதலைப்புலிகளின் பலத்தை ஒடுக்குவதற்கு பயன் படுத்தப்படும் எனவும் கூறினார். (க)

## தலைமைப்பணியகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தன.

இச்சம்பவத்தில் இராணுவ லெப். கேர்ணல் லெப்டினன் மற்றும் கடற்படை உயரதிகாரியும் இரு சிப்பாய்களும் கொல்லப்பட்டதாகவும் இருவர் படுகாயமடைந்ததாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இது படையினருக்குப் பெரும் அடியென பி. பி. ஸி. வர்ணித்தது. (சி)

## பாரிய இராணுவ

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களின் இந்த முயற்சியை எதிர்த்து விடுதலைப் புலிகள் மிகக்கடும் எதிர்த்தாக்குதலை நேற்று மாலை வரை மேற் கொண்டிருந்தனர். (சி-56)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence Number B/10336/81